**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.178/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-5 |
| Name | : | அனிதா, வயது 29 |
| Father Name/Husband Name | : | குமார் |
| Village | : | துரைச்சாமியாபுரம் |
| Taluk | : | சிவகாசி |
| Calling | : | பட்டாசு தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2025.

**(Accused Present).**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது துரைச்சாமியாபுரத்தில் வசித்து பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது ஊர்காரர். 30.09.2023 அன்று இரவு சுமார் 11.45 மணியளவில் எங்கள் ஊரில் இருந்து திருச்சொத்தூர் செல்வதற்காக விடியோ கோச் பஸ்சில் எட்டையபுரம் ரோடு, வ.உ.சி பள்ளி அருகே சென்றபோது எதிரி கவனக்குறைவாக சடன்பிரேக் பிடித்தால் பஸ் கவிழ்ந்துவிட்டது. நான் பஸ்குள் எதிரியன் பின்னால் அமர்ந்திருந்தேன். அந்த விபத்தில் எனது அத்தை பஞ்சவர்ணம் இறந்துவிட்டார். எனது கணவர் குமாருக்கு இடது தோள்பட்டையிலும், இடது முழங்கையிலும் காயம் ஏற்பட்டது. எனது மகன் ஸ்ரீஹறிக்கு வலது கை மணிகட்டுக்கு மேல் பகுதியிலும், எனது மருமகள் அபர்ணா இடது கால் முட்டிக்கு மேல் பகுதியிலும், எனக்கு தலையின் இடது பக்கத்திலும், கழுத்தின் பின் பகுதியிலும், சந்திரகலாவிற்கு இடுப்பிலும், மாமா கார்த்திக்குமாருக்கு இடது கை தோள்பட்டைக்கு கீழ் பகுதியிலும், எனது பெரியம்மா அண்ணபாக்கியத்திற்கு தலையிலும், மற்றவர்களுக்கு சிறிய காயங்களும் ஏற்பட்டது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. போலிஸார் விாசரணையில் எதிரி சடன்பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டதாக சொன்னீர்களா என்றால் சொன்னேன். சம்பவம் நடு இரவில் நடைபெற்றது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் பாதிபேர் தூங்கினாாகள் என்றும், மீதி பேர் தூக்க கலக்கத்தில் இருந்தார்கள் என்றால்

நான் தூங்கவில்லை, பாதி பேர் தூங்கியிருக்கலாம். இறந்துபோன பஞ்சவர்னம் எனக்கு இடது பக்கம் மூன்றாவது இருக்கையில் அமர்ந்திருந்தார், அவர் தூங்கி கொண்டிருந்தாரா, முழித்துகொண்டிருந்தாரா என்று எனக்கு தெரியாது. நானும், எனது கணவரும் அடுத்து அடுத்து உட்காந்து கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல, எனது கணவர் கடைசி இருக்கையில் அமர்ந்திருந்தார். எனது இருக்கைக்கும், டிரைவரின் இருக்கைக்கும் இடையே மறைப்பு உண்டு. டிரைவரின் மேல் பகுதியில் டிவி இருந்தது என்றால் நான் கவனிக்கவில்லை, டிவிக்கான பெட்டி இருந்ததா என்றும் நான் கவனிக்கவில்லை.

3. விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் விடியோ ஓடிக்கொண்டிருந்தது என்றால் சரியல்ல. வாகணத்தின் இடது முன்பக்கம் முதல் இருக்கையில் எனது பெரியம்மா அன்னபாக்கியமும், மருமகன் சுபாஷ்ம் இருந்தார்கள். எனது இருக்கைக்கு முன்பு மறைப்பு இருந்ததால் முன் பகுதியில் நடந்தது எனக்கு ஓரளவிற்கு தான் தெரியும். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தன்று வாகணத்திற்கு முன்பக்கம் குறுக்கே கால்நடைகள் வந்ததா என்று எனக்கு தெரியுமா என்றால் நான் பார்க்கவில்லை. வ.உ..சி பள்ளி சம்பவ இடத்திற்கு வலது பக்கம் உள்ளது. அந்த பள்ளிக்கு எதிரே அரசு மருத்துவமணையும், காவல் நிலையமும் உள்ளது, வேறு என்ன கட்டிடங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. நடந்ததாக சொல்லப்படும் சம்பவ சமயத்தில் நான் தூக்க கலக்கத்தில் இருந்ததால் சம்பவ இடத்தில் இருந்து முக்கால் கி.மீ தள்ளியுள்ள அரசு மருத்துவமணையும், காவல் நிலையமும், சம்பவ இடத்தின் அருகே இருப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. எதிரியால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும், போலிஸா கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று சாலையின் குறுக்கே ஆடு வந்த விவரத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆடு அடிபடாமல் இருப்பதற்காக எதிரி சடன்பிரேக் பிடித்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக நஷ்டஈடு கோட்டு நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அதில் அதிக நஷ்டஈடு பெற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand
Judicial Magistrate No.I,
Kovilpatti.